உ
சிவமயம்

# சுதேச வைத்தியக் கைநூல்

வண்ணை
சுதேச வைத்திய நிபுணர்
அமரர்

# தம்பிப்பிள்ளை இராமலிங்கம்

அவர்கள்

# நூறாண்டு நிறைவு வெளியீடு

வெளியிடுவோர் :
மைந்தன்
இராமலிங்கம் சண்முகநாதன் அவர்கள்

பிறவுண் வீதி,
வண்ணைநகர் - யாழ்ப்பாணம்.

23 - 10 - 85.

# வெளியீட்டுரை

சுதேச வைத்திய நிபுணர் பலர் பெருமையோடு வாழ்ந்து, மூலிகைகளைப் பயன்படுத்தி, இயற்கை வைத்தியம் செய்து, பல்வேறுவகைப்பட்ட நோய்களை நீக்கிய எம் நாட்டில்; சித்தவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் மெத்தப் புகழ்பெற்று நிலவியது ஒருகாலம்.

அத்தகைய பொற்காலம் போயகல மேற்குத்தேய வைத்திய முறைகள் நாட்டிற் புகுந்து நோய்களின் மூல மறியாமல் சிக்கல்களை உண்டாக்கிச் சீரழிவு செய்ததும் உண்டு.

இன்று எம்மவர் தங்கள் பழைய நாகரிகம், பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியவற்றை மீள நினையுங் காலத்தில், பழைய வைத்தியர் ஒருவரின் நீங்கா நினைவு எம்மவர் மத்தியில் நிலவுதல் வேண்டுமென்னும் அபிலாசையால் இதனை வெளியிட நினைந்தோம்.

இம்முயற்சியில் எம்மை ஊக்கப்படுத்திய பலருள் தக்க வைத்தியர்களான S. A. குஞ்சிதபாதம், P. சோமசுந்தரம், அ. வி. இராசரத்தினம் ஆகியோருக்கு எம் நன்றி. வைத்தியர் இராசரத்தினம் அவர்கள் மதிப்பு வாய்ந்த அணிந்துரை ஒன்றையும் எழுதியுதவினார்கள்.

இத்தொகுப்பில் இடம்பெறுகின்ற சித்தவைத்திய குழுக்குறி மொழிகளைத் தயாரித்துத் தந்ததோடு நூலாக்கத்துக்கும் வழிகாட்டியாயிருந்த திரு. க. சி. குலரத்தினம் அவர்களுக்கும் எம் நன்றியுரியதாகும். இன்னும் குறுகிய காலத்தில் இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த வண்ணை சாந்தி அச்சகத்தாருக்கும் எமது உளமார்ந்த நன்றி உரியதாகும்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
21-10-85.

**இ. சண்முகநாதன்**

வண்ணை சுதேச வைத்தியர்



அமரர்

தம்பிப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள்

23 – 10 – 1885 24 – 1 – 1957

# அணிந்துரை

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் 1935ம் ஆண்டு தை மாதம் தைப்பூசத்திலன்று ஓர் சுதேசவைத்தியக் கல்லூரி (College of Oriental Medicine) ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னாள் அமைச்சர் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைவராக விளங்கினார். அக் கல்லூரி 1936ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரையுமே நடைபெற்றது. நான் அக்கல்லூரியில் சேர்ந்து படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பாடத்திட்டத்தில் "பதார்த்தகுணம்" என்னும் பாடம் அமைந்திருந்தது. இதற்காக வண்ணார்பண்ணை கிழக்கில் வசித்த காலஞ்சென்ற வைத்தியர் தம்பிப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள் எங்களுக்கு பதார்த்தகுண சிந்தாமணி என்னும் நூலைக் கற்பித்தார். அவர் அங்கு சிலகாலம் மட்டும் கற்பித்தாராயினும் அவருடைய அறிவு ஆற்றல், ஆர்வம் ஆகியவற்றை அவதானிக்க கூடியதாயிருந்தது. தனது அனுபவரீதியான அறிவையும் வைத்திய மாணவர்கட்குப் புகட்டவேண்டுமென்ற ஆர்வமுடையவர். ஆகவே அவரின் கையாட்சி முறைகளையும் சிலபதார்த்தங்களின் மறு பெயர்களையும், அவற்றின் ஆங்கிலப் பெயர்களையும், தாவர சாஸ்திரப்பெயர்களையும் கொண்ட ஓர் நூலை அவரின் ஞாபகார்த்தமாக நூற்றாண்டுவிழாவில், அவரின் மக்கள் வெளியிட்டு அச்சுவாகனமேற்றுவது மிகவும் சாலச்சிறந்தது. இந்நூலானது வைத்தியர்கட்கும் சிறப்பாக வைத்திய மாணவர்கட்கும் மிகவும் பயன்தரக்கூடியதாயிருக்குமெனக் கருதுகின்றேன். அவரின் மக்களின் அரியசேவைக்கு வைத்திய உலகமே என்றும் நன்றி பாராட்டவேண்டும்.

அ. வி. இராசரத்தினம்.
இலங்கா ஆயுள்வேத சித்தவைத்தியக்
கல்லூரி - விரிவுரையாளர்.

யாழ்ப்பாணம்.
11-10-85.

உ

சிவமயம்

# நூறு ஆண்டு பூர்த்தி

பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை (23-10-1885) திருவாளர் வேலாயுதபிள்ளை தம்பிப்பிள்ளை, திருவாட்டி நாகமுத்து தம்பதிகளின் தலைமகனாக ஆவரங்காலில் உதித்தார். திரு. இராமலிங்கம் அவர்கள் இளமையிலேயே அவ்வூரைச் சேர்ந்த பிரபல வைத்தியர் திரு. சி. தாமோதரம்பிள்ளையிடம் வைத்தியம் கற்ற பின் ஓர் இந்திய சந்நியாசியாரிடம் சித்த வைத்தியத் துறையில் சிறப்பான அறிவு பெற்று அவரின் ஆசீர்வாதத்துடன் தனது பதினெட்டாம் ஆண்டுப் பராயத்திலேயே வைத்தியத் தொழிலை ஆரம்பித்தார். பின்பு சில ஆண்டுகள் கொழும்பிலும், நீர்கொழும்பிலும் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். கொழும்பில் தொழில் செய்யும்பொழுது முதலியார் பொன்னம்பலம் குமாரசாமி, சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகிய பெருமக்கள் தொடர்பு கிடைத்தது. இது அவரின் முன்னேற்றத்திற்கு பெரிதும் வசதியாக அமைந்தது.

இவர் வண்ணார்பண்ணையில் வசித்த வல்லிபுரம் சின்னையா அவர்களின் தலைமகள் நாகரத்தினம் என்பவளை மணந்தபின் தமது தொழிலை வண்ணார்பண்ணையிலேயே செய்துவந்தார். இவர் ஐம்பத்து நான்கு வருடங்கள் வரை தொழில் செய்து பல முன்னேற்றங்களை வைத்தியத் துறையில் புகுத்துவதற்கு காரணிகராக இருந்து (24-1-1957) துர்முகி வருடம் தை மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

வைத்தியத்துறையில் அவர் ஆற்றிய பணிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

(1) சுதேச வைத்தியர்களின் சீர்குலைந்த நிலையைப்போக்க (19-10-29ல்) வைத்திய சங்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவராக இருந்ததோடு, உதவிக் காரியதரிசிப் பதவிப் பொறுப்பையும் ஏற்றார். பழைய தொடர்பு காரணமாகச் சேர் பொன். இராமநாதன் உட்பட பதினொரு பெரியார்களை அதிபர்களாக (Patrons) வைத்து பல வசதிகளை சங்கமூலம் செய்தமை.

(2) சுதேச வைத்தியத்தின் மேம்பாட்டை அரசினர்க்கு உணர்த்தும் நோக்கத்தோடு அரசினரின் ஆங்கில வைத்தியசாலையுடன் தனித்தே

போட்டியிட்டு ஓரிரு தடவைகள் நீதிமன்றத்தில் நிற்கவேண்டிய அவல நிலை உண்டானபோதிலும் அதில் கீர்த்தியுடன் வெற்றியீட்டினர்.

(3) மருந்துகள் கண்காட்சியொன்றை 1935ம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடாத்துவதற்கும் வைத்தியம் கற்பிப்பதற்கும் உதவியாய் இருந்து நடத்தியது.

(4) வைத்தியக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் அமைந்தல் போதித்தல், பரீட்சைகள் நடாத்துதல் ஆகியவற்றில் தமது தீவிரமான பங்களிப்பைச் சரிவரச் செய்தமை.

(5) அபின், கஞ்சா போன்ற சரக்கு மூலிகைகள் சுதேசவைத்தியத்தில் உபயோகப்படுத்துவதை அரசினருக்கு எடுத்துக்கூறி, அவற்றைப் பயன்படுத்துவோருக்கு அவை கிடைக்கக்கூடியதாகவும் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும் என்றும் வாதாடினார்கள். அதன்பயனாக அரசினர் இவற்றை உபயோகிக்கும் வைத்தியர்களைத் தனித்தனியே நேர்முகமாக விசாரித்து தவணை முறையில் அவர்களுக்கு அவரவர் தேவைக்கேற்ப பேர்மிற் (Permit) மூலம் அபின் வழங்கினார்கள். ஆனால் கஞ்சா வழங்கப்படவில்லை. இன்று இம்முறைகள் குறைந்து குறைந்து வழக்கத்தில் இல்லையெனும் அளவிற்கு வந்துவிட்டது. பேர்மிற் கிடைத்தவர்களில் கூடிய நிறைக்குப் பெற்றவர்களில் இவரும் ஒருவராவர்.

(6) இவர் தாம் உபயோகிக்கும் சகல மருந்துகளையும் தாமாகவே தயாரிக்கும் பண்புடையவர். இவ்வேலைகளில் பாரியாருக்கும் பாதிப் பங்குண்டு. இது எத்தனை வைத்தியர்களுக்குண்டு. செந்தூரம், பஸ்பம், தைலம் போன்றவை இரவுபகல் பாராது அவதானிக்கவேண்டியவை.

(7) வைத்தியர்கள் வீடுகளில் சில அத்தியாவசிய மூலிகைகள் இருக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைக்கவேண்டும் என்ற கருத்தையும் வைத்தியர்களிடையே பரப்பியவர்.

(8) கைநாடியைப் பார்த்து நோய் நிதானம், நோய்க்குக் காரணம் ஆகியவற்றைச் சுலபமாகக் கூறும் ஆற்றல் படைத்தவர். அதுமட்டுமல்ல தூதுவன் இலட்சணத்தைக் கண்டு செயல்படுபவர்.

அவர்காலத்தில் நெஞ்சில் கபம் இருந்தால் அது இளகுவதற்கு நெஞ்சில் ஆமணக்கெண்ணை தடவி அதன்மேல் மூலைப்பாலில் அரைத்த

சாளியாவைத் தடவி மேலே ஆமணக்கெண்ணெய் பூசப்பட்ட சிந்தில் இலையை அப்பிவிடுவார்கள். இது சாதாரண வழக்கம். இப்போது முலைப்பால் எங்கே, சிந்தில் எங்கே, வாதமடக்கி, பாவட்டை நொச்சி போன்றவை எங்கே? இவை கிடைப்பது அரிது, நாகரிக மேம்பாட்டினால் அவல நிலையில் இருக்கும் மக்கள் பாண்காரனுக்குப் பின் ஓடும் பத்தினிமார்களைப் பெற்ற பாக்கியவான்கள் பத்தியம், குடிநீர் இல்லாத மருந்துகளையே விரும்புவார்கள். அனுமானம், பத்தியம், குடிநீர் சொல்லும் வைத்தியர்கள்பாடும் அவலம் தான். 'பாவத்திற்குப் பிறந்தால் பரிகாரி என்ன செய்யலாம்'' என்பது பழமொழி.

இந்நிலையிலும் பழமையைப் பேணுவோரின் நலன்கருதி அவர் பாவித்த சில குடிநீர்களும் வைத்திய சம்பந்தமான சில விஷயங்களும் (19-10-1929) சுக்கில வருடம் ஐப்பசி மாதம் 3ம் திகதி ஆரம்பிக்கப் பட்ட சுதேச வைத்திய சங்கத்தின் முதலாவது நோக்கத்தையும் 1939ம் ஆண்டு வைத்திய மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானம் வரவேற்புரை ஆகியவற்றை அன்றைய வைத்தியர்களின் குறிக்கோள்களையும், அவர்கள் வைத்தியம் செய்த சூழ்நிலையையும் ஓரளவு புலப்படுத்தும் இன்றைய வைத்தியர்கள் தற்போதைய நிலையை நோக்குவார்களேயானால் அன்றைய நிலையிலிருந்து இன்று எவ்வளவு முன்னேறியுள்ளார்கள் என்பதையும் இன்னமும் எவ்வளவு எம் மூதாதையர்களின் குறிக்கோளில் எஞ்சியுள்ளது என்பதையும் அறியக்கூடியதாய் இருக்கும்.

### சங்கத்தின் முதலாவது நோக்கம்:

தமிழ் ஆயுள்வேத வைத்தியத்தை தற்கால முறைப்படி கற்பிப்பதற்கு ஒரு சுதேச வைத்தியக் கலாசாலையையும், வைத்திய சம்பந்த புத்தகங்கள் அமைந்த ஒரு புத்தகாலயமும், சுதேச வைத்தியத்திற்குரிய தாவர, லோகவகைப் பதார்த்தங்கள் அமைந்த ஒரு பொருட்காட்சி சாலையும், வைத்தியத்திற்குரிய மூலிவகைகள் அமைந்த ஒரு தோட்டமும், எவ்வகையான நோய்களுக்கும் வைத்தியம் செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட ஒரு சுதேச வைத்தியசாலையும் ஸ்தாபித்தல்.

ஓம்

# அகில இலங்கைத் தமிழ் ஆயுள்வேத வைத்திய மகாநாடு

## வரவேற்புச்சங்கத் தலைவரின் உபசாரப்பத்திரம்

அக்கிராசனரவர்களே! சபையோர்களே!

இம்மகாநாட்டின் வரவேற்புச் சங்கத்தின் சார்பாக உங்கள் எல்லோரையும் மகிழ்ச்சியுடன் இங்கு வரவேற்கின்றேன். இச்சபையில் சிறந்த கல்விமான்களும், வைத்திய நிபுணர்களும், சுதேச வைத்தியத்தில் மிகுந்த அபிமானமுடையவர்களுமான நீங்கள் அனேகர் கூடியிருக்கிறீர்களென்பதை நன்கறிவேன். நீங்களெல்லாம் இத்தேசத்திற்குப் பூஷணமாயிருக்கிறீர்கள். நீங்கள் பல்வேறு இடங்களில் வசிப்பவர்களாயிருந்தபோதிலும், பண்டைக்காலத்து ஆயுள்வேத சாத்திரத்தில் உங்களுக்குள்ள அன்பின்காரணமாகவே இங்கு விஜயம் செய்திருக்கின்றீர்கள். உங்களுக்குள்ள முக்கியமான தொழில்களை விட்டும் நெடுந்தூரம் பிரயாணம் செய்வதினுலுண்டாகும் சிரமத்தைப் பொருட்படுத்தாமலும், நீங்கள் இவ்விடம் வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. உங்களை வரவேற்கும்படியான கௌரவம் எனக்கு ஏற்பட்டதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கின்றேன்.

யாழ்ப்பாணமானது ஓர் சரித்திரப் பிரசித்தமான நாடு. முற்காலத்தில் இது ஒரு மணல் திடலாக இருந்ததென்று அறிகிறோம். இக்காலத்திலும், வருணபகவானின் கோபத்திற்கும், சூரியபகவானின் நேசத்திற்கும் பாத்திரமாயிருக்கின்றதென்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். என்றுலும் இந்நாட்டு மக்களின் பெருமுயற்சியால் எங்கு பார்த்தாலும் செடிகளும், மரங்களும், சோலைகளும், தோட்டங்களும், வயல்களும் நிறைந்து மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றன. "முயற்சி திருவினையாக்கும்" என்ற பொன்மொழி இந்நாட்டிற்கே தகும்.

இந்நாட்டிலுள்ள மக்கள் பெரும்பாலும் தென் இந்தியாவிலிருந்து வந்துள்ளாரென்பதை சரித்திரவாயிலாக அறிகிறோம். தெற்கேயுள்ள சிங்களநாட்டு மக்களும் அவ்வாறே பெரும்பாலும் வடஇந்தியாவிலிருந்து வந்துள்ளாரென்பதையும் அறிகிறோம். இரு பகுதியாரும்

இந்தியாவிலிருந்து வரும்பொழுது அங்குள்ள நாகரிகத்தையும், மொழிகளையும், சமயத்தையும், சாத்திரங்களையும், கலைகளையும் தங்களுடன் கொண்டுவந்தார்கள். ஆனால் கொண்டுவந்தவைகளை இலங்கையின் நிலைமைக்கேற்பத் திருத்தியும், புதுக்கியும், வளர்த்துமிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பலநூற்றாண்டுகளாகவே பெரிய புலவர்களும், மற்றும் நிபுணர்களும் இருந்துவந்திருக்கிறார்கள். சிங்களநாட்டில் மலைகளும், காடுகளும் அதிகமாயிருப்பதால் சிங்களவர் மூலிகைகளையும் ஓஷதிகளையும் ஆதாரமாகக்கொண்டு வைத்திய முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். அவர்களுக்குச் சரகஸம்ஹிதை, அஷ்டாங்க ஹிருதயம் முதலிய ஆயுள்வேத நூல்கள் பிரமாணம். யாழ்ப்பாணத்திலோ, சிங்களநாட்டிலுள்ள வசதிகளில்லாமையினாலும், அதன் மக்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்தமையாலும், சித்தமுறைப்படி செந்தூரம், பஸ்மம் முதலியவை வழங்கி வருகின்றன. இந்நகரில் சில நூற்றாண்டுகளுக்குமுன் பரராஜசேகரன் என்ற மன்னர்பிரான் உதித்திருந்தார். அவர் காலத்தில் தமிழ்மொழியும், தமிழ் மருத்துவமும் தலைசிறந்து விளங்கின. அவர் காலத்தில் இயற்றப்பட்ட பரராஜசேகரம் என்னும் அரிய மருந்துவ நூல் இன்றும் யாழ்ப்பாணத்தில் எங்கும் நிலவுகின்றது.

நாட்டு வைத்திய விஷயமாக முக்கியமான குறிப்புகளிரண்டொன்றைக் கூற விரும்புகின்றேன். மருத்துவ நூல்கள் தமிழிலும், வேறு மொழிகளிலும் நமது நாட்டில் வெகுகாலமாக இருந்துவந்தாலும் அவைகளைக் கற்பதற்கு வேண்டிய வசதிகள் சாதாரண மக்களுக்கில்லை. வைத்திய முறைகள் சிற்சில குடும்பங்களுக்குள் அகப்பட்டுக்கொண்டு வெளிவரமுடியாமலிருக்கின்றன. பரம்பரை வைத்தியர் அறிவாளியாயிருக்கலாம். ஆனால் அவர் நூல்களையும் தற்காலத்தில் கற்கவேண்டிய முறையில் ஆராய்ச்சியுடன் கற்றுத்தொழிலை நடத்துவராகில் அவரால் ஏற்படும் நன்மை அதிகமாயிருக்கும். சித்தசாத்திரமும், ஆயுள்வேத சாத்திரமும், மிகச்சிறந்த முனிவர்களால் எழுதப்பட்டிருந்தபோதிலும் தற்கால நாகரிகத்தில் புதிய புதிய நோய்களும் மக்களுடலில் புதிய புதிய மாறுபாடுகளும் ஏற்பட்டிருக்கிறபடியால் அப்பழையகாலத்து நூல்களை இருந்தபடியே பின்பற்றுவது அவ்வளவு நன்மையைப் பயவாது. ஆகையால், இக்காலத்திற்கேற்ப ஆயுள்வேத சித்த வைத்திய கலாசாலைகளை நிறுவி, பாட அட்டவணைகளையும் காலத்திற்கேற்ப அமைத்துத் தகுந்த ஆசிரியரைக்கொண்டு மருத்துவ சாத்திரத்தைக் கற்பிக்கவேண்டும்.

தவிரவும், நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதற்குத் தகுந்த சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளை ஏற்படுத்துவது அத்தியாவசிய மாகும். இதற்கு அரசாங்கத்தார் வேண்டிய உதவிபுரியவேண்டும். ஆனால் அரசாங்கத்தாரின் மனப்பான்மையோ அவ்வளவு அநுகூலமா யில்லை. இதை விளக்க ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்; சில வைத்தியசாலைகளுக்கு வருடமொன்றுக்கு நூறு ரூபாயிலிருந்து இருநூற்றுநாற்பது ரூபாய்வரை உதவிப்பணமாக அரசாங்கத்தார் கொடுக்கின்றனர். ஆனால் இதனைப்பெறும் வைத்தியசாலைகள் சில கடுமையான நிபந்தனைகளுக்குக்கட்டுப்படவேண்டும். அவைகளில் சில வருமாறு. இத்தொகையிலிருந்து வைத்தியசாலை வாடகையைக் கொடுக்கக்கூடாது. வைத்தியன் தனக்கு ஊதியமாக ஒரு சதமும் எடுக்கக்கூடாது. மருந்தைத் தயாரிக்கும் கூலியாட்களுக்குச் சம்பள மும் கொடுக்கக்கூடாது. மருந்துச் சாமான்கள் வாங்குவதற்குமட்டும் இப்பணத்தை உபயோகிக்கவேண்டும். வைத்தியசாலைக் கட்டிடத்தை 10 வருஷத்திற்கு ஒரு கமிட்டியின் ஆளுகைக்குள் எழுத்துமூலமாக வைக்கவேண்டும். வைத்தியசாலையும் அக்கமிட்டியின் மேற்பார்வையி லிருக்க வேண்டும். உதவிப்பணம் பெறுவதற்கு 2 வருஷத்திற்கு முன் வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டும். வைத்தியர் கமிட்டி மெம்பர்களுக்கு ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறெல் லாம் நடக்கின்றதா என்பதை மணியகாரன், உடையார் முதலிய உத்தியோகத்தர் நன்றாக விசாரணை செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டும். ஒரு ஆங்கில வைத்தியரை இத்தகைய கட்டுப்பாடு களுக்குள்ளாக்கி வேலை செய்யச்சொன்னால் அவர் செய்வாரோவென் பதை சபையோர்கள் யோசிக்கவேண்டும். இவ்வாறு கட்டுப்பட்டு வேலைசெய்யும் சுதேச வைத்தியர்கள் எவ்வளவு மானத்தையிழந்து வறுமை வாய்ப்பட்டிருக்கவேண்டுமென்பதை நீங்களே யோசித்துக் கொள்ளலாம். இப்பொழுது அரசாங்கத்தார் நாட்டு வைத்தியத்திற் குக் கொடுக்கும் ஆதரவு இறப்பவன் வாயில் ஒரு துளி நீர் விட்டது போலிருக்கின்றது. மேனாட்டு வைத்தியத்தைப் பின்பற்றும் வைத்தி யர்களுக்குக் கொடுக்கும் உதவியை அரசாங்கத்தார் சுதேச வைத் தியர்களுக்குக் கொடுத்தால், மேனாட்டு வைத்தியத்திலும் பார்க்க நம்நாட்டு வைத்தியம் நூறுமடங்கு சிறப்புற்றிருக்குமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

சபையோரே, மேற்கூறிய இரண்டு விஷயங்களையும் சுதேச வைத் தியத்திற்குச் சம்பந்தப்பட்ட வேறு விஷயங்களையும் இங்கே நீங்கள்

நன்றாக ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும்: அரசாங்கத்தினரும், ஆங்கிலம் பயின்ற சிலரும் நாட்டுவைத்தியத்தை அசட்டை செய்தாலும், அல்லது முழுமனதுடன் ஏற்காவிட்டாலும் பொதுமக்கள் அதில் மிகுந்த நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகையால் பொதுமக்கள் நன்மையைக்கருதி அவர்களுக்கு ஊக்கத்தையுண்டு பண்ணி, அவர்கள் மூலம் நாம் கிளர்ச்சிசெய்து அரசாங்கத்தார் தமிழ் வைத்தியத்திற்குத் தாங்கள் ஆற்றவேண்டும் தொண்டை ஆற்றும்படியாக வற்புறுத்தவேண்டியது நமது கடமையாகும்.

இங்ஙனம்

யாழ்ப்பாணம்,
8-7-39.

த. இராமலிங்கம்
வரவேற்புச் சங்கத்தின் தலைவர்.

# அகில இலங்கைத் தமிழ் ஆயுள்வேத வைத்திய மகாநாடு

யாழ்ப்பாணம்.

மேற்படி மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின்வருமாறு:-

(1) ஆயுள்வேத வைத்திய முறையும், அவ் வைத்திய முறையில் தொழில்புரியும் கற்றறிந்த வைத்தியர்களையும் எல்லாத்துறைகளிலும் ஆதரித்து அவர்களுடைய அபிவிருத்தியைத் தேடவேண்டியது இத் தேசத்து அரசாங்கத்தாருடைய கடமைகளில் ஒன்றாகையால் இனி அரசாங்கத்தார் இவ் விஷயத்தில் விசேஷ ஆதரவ அளிக்கவேண்டுமென்றும், அதற்கான எல்லா வசதிகளையும் அவர்கள் செய்யவேண்டுமென்றும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(2) ஆயுள்வேத வைத்தியர்கள் சிறந்த யோக்கியதை உள்ளவர்கள் என்பதாக அரசாங்கத்தார் அங்கீகரிக்கவும், பொதுஜனங்கள் நம்பிக்கை கொள்ளவும் அனுகூலமாயிருப்பதையும், போதிய யோக்கியதை பெறாமல் கேவலம் பாரம்பரை வைத்தியர்கள் என்று சொல்லிக்கொண்டு வைத்தியம் செய்வது சரியல்லவென்பதையும் தீர ஆலோசித்து, இனிமேல் தேசிய வைத்தியத் தொழிலில் முயற்சிக்க அவாவ்கொள்ளும் அனைவரும் ஏதேனும் தகுந்த வைத்தியக் கல்லூரியில் படித்துத் தேர்ந்து யோக்கியதைபெற்ற பிறகே அத்தொழில் செய்யலாமென்றும் அவ்விதமில்லாதவரை வைத்தியர்களாக அங்கீகரிக்கக்கூடாதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

(3) (a) இலங்கை அரசாங்கத்தார் சில தேசிய வைத்தியசாலைகளுக்கு வருடாந்தத்திற் செய்யும் பணவுதவியைப் பற்றி இச்சபை பாராட்டுகிறது.

(b) ஆனால் அப்பணவுதவி மிகவும் சொற்பமென்றும் அதை வருடத்துக்குக் குறைந்தது ரூபா 500 ஆக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

(c) அரசாங்கத்தார் தேசிய வைத்தியசாலைகளுக்குப் பணவுதவி செய்யும் விஷயத்தில் ஏற்படுத்தியுள்ள அடியிற் குறிப்பிட்டுள்ள நிர்ப்பந்தங்கள் மிகவும் நியாய விரோதமென்றும், அவற்றால் பணவுதவி பெறும் வைத்தியர் அளவற்ற கஷ்டங்களுக்கும் நஷ்டங்

கருக்கும் ஆளாகின்றார்கள் என்பதை அரசாங்கத்தாரே நன்கறியக் கூடுமாகையால் அந் நிர்ப்பந்தங்களை உடனே விலக்கிவிட வேண்டுமென்றும் இச்சபை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

நிர்ப்பந்தங்கள்:- 1. அரசாங்கத்துப் பணத்திலிருந்து வாடகை கொடுக்கக்கூடாது. 2. கூலி கொடுக்கக்கூடாது. 3. பத்து வருஷத்திற்குக் கட்டடத்தைக் கமிற்றியாரின் ஆதீனத்தில் விட்டுவைப்பது. 4 கமிற்றியாரிடம் வைத்தியர் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். 5. மணியகாரர், உடையார் முதலியவர்களின் விசாரணையில் வைத்தியசாலை இருந்துவரவேண்டும் 6 பணவுதவி கொடுக்கும் விஷயத்தில் சென்னை அரசாங்கத்தார் அனுசரிக்கும் முறை நியாயமாயிருப்பதால் அதையே இவ் அரசாங்கத்தாரும் பின்பற்ற வேண்டுமென்று இச் சபை கேட்டுக்கொள்கிறது.

(4) (a) இலங்கை ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியென்கின்ற யாழ்ப்பாணத்து வைத்திய பாடசாலை இப்பொழுது Dr. H. S. ஐயங்கார் அவர்களால் ஏகதேசத்தில் வெகு சிரமப்பட்டு நடத்தி வருவதையும், சுயநலம் கருதாது இதற்காக அவர் பெருஞ் செலவு செய்து வருவதையும் இம் மகாநாடு மிகவும் பாராட்டுகின்றது.

(b) இக் கல்லூரி இனி நிலைத்து நிர்வகிக்கப்படும் வகையில் அரசாங்கத்தார் இலங்கை கொழும்பு நகரத்திலுள்ள தேசீய வைத்தியக் கல்லூரிக்குச் செய்வதுபோன்ற பொருளுதவியைச் செய்து உதவி செய்ய வேண்டுமென்றும்,

(c) அவ்வாறமைந்தால் மாணவர்களுக்கு வைத்தியம் கற்கத் தேவையான வைத்தியசாலை, (Hospital) ஔஷதசாலைகளையும், இதைச் சேர்ந்தாற்போல் அமைத்து நிர்வகிக்கப் போதிய எல்லா உதவிகளையும் செய்யவேண்டுமென்றும் இச் சபை கேட்டுக்கொள்கின்றது.

(d) யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மாணவர்கள் கொழும்புக்குப் போய் அங்குள்ள வைத்தியக் கல்லூரியில் கல்வி கற்கும் விஷயத்தில் அனேகவித கஷ்டங்கள் இருப்பதையும், இதற்கு முந்தி யாழ்ப்பாணத்திற்குத் தமிழ் வைத்தியப் பகுதியை அனுப்புவது விஷயமாய் அரசாங்கத்தாருக்குச் சிலர் செய்துகொண்ட மகஜர் இலங்கை ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிக்குப் பணவுதவி செய்யும் விஷயத்தில் எவ்விதத்திலும் அட்சேபம் கூறியதாகத் தெரியவில்லையென்பதையும், சுகாதார மந்திரிகளும் மற்றுமுள்ள அதிகாரிகளும்

நிரயோசித்து யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியை ஆதரிக்கச் சகல சௌகரியங்களையும் செய்து கொடுக்க ஒருவித ஆட்சேபனையும் கிடையாதெனபதையும் இவ் வைத்திய மகாநாடு அரசாங்கத்தாருக்கு அறிவிக்கின்றது.

(c) இக் கல்லூரி மிகவும் உபயோகமுள்ள வேலைசெய்து வருவதாகவும், இதற்கு உடனே தேவையான பணவுதவி செய்யவேண்டியது அவசியமென்பதாகவும் மேன்மை தங்கிய இருதேசாதிபதிகளும், கனந்தங்கிய இரு சுகாதார மந்திரிகளும அபிப்பிராயப்பட்டு குறிப்புப் புத்தகத்திலும் விளங்க எழுதியிருப்பதால், அவ்வித அதிகாரிகளுடைய வாக்குறுதியை நிறைவேறறவேணடியது அவசியமென்பதையும் இச்சபை அரசாங்கத்தாருக்கு ஸபஷ்டமாக ஞாபகபபடுத்துகிறது.

(5) (a) இலங்கையில் ஆயுள்வேத வைத்தியம் செய்பவர்களுடைய அந்தஸ்லதை அரசாங்கத்தார் அங்கீகரிககவும், அரசாங்கத்தாரும் அவ்வித வைததியாகளுடைய எண்ணிக்கையைத் தெரிந்துகொணடு அவர்களை ஒரு கட்டுள உட்படுத்தவும், இதனபிறகு வைததியத் தொழில் செய்யப் புதிதாக முயற்சி செய்பவர் ஏற்ற கலாசாலை முதலியதில் படித்துத் தேறி யோககியதை பெறுமலறி அத்தொழிலில் முயலக்கூடாதெல்கிற ஒரு நியமத்தை ஏறபடுத்தவும், சென்னை அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருப்பது போன்ற ஒரு தேசிய வைததியப் பதிவு நிபந்தனையை ஏறபடுத்தவேண்டும்.

(b) அவ்வித நிபந்தனை தற்பொழுது வைத்தியம் செய்பவர் எவரையும் பாதிககாதபடி அமைக்கப்படவேணடும் என்று இச் சபை கேட்டுக்கொள்கிறது.

(6) மேகரோகங்கள் அல்லது ஆங்கிலத்தில் 'வினீறியல் டிசீஸ்' எனப்படும் வியாதிகளால் வருந்தும பிணியாளிகளுக்கு ஆயுள்வேத வைத்தியர்கள் வைத்தியம் செயயக்கூடாதென்று அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிற சட்டம் நியாயமல்லவென்றும், மே. த. கவர்ணர் அவர்களிடமிருந்து லைசென்ஸ் பெறுவது எளிதல்லவென்றும், வேறு ரோகங்களால் வருநதுபவருக்குக்கூட மேகம் அல்லது வினீறியல் சம்பந்தமான கோளாறுகளின் பற்றுதல் பெரும்பாலுமிருக்கக் கூடுமானகையால அவ்வித பிணியாளிகளைப் பிரித்துப் பார்த்து வைத்தியம் செய்வதில் அனேகம் அசௌகரியம் ஏற்படுவது சகஜமானது பற்றி, இச சட்டத்தைத் உடனே ரத்துசெய்ய வேண்டுமென்றும் நாங்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(7) ஆயுள்வேத வைத்தியத்தில் சில ஔஷதங்களில் கஞ்சா சேர்க்கவேண்டியிருப்பதாலும், அது சில ரோகங்களில் இவ் வைத்திய முறையில் அதிகபலன் தருவதாக எங்களுக்குத் தெரியுமாகையாலும் அச்சரக்கு இத்தேசத்தில் ஓரளவேனும் எல்லாவிடங்களிலும் கிடைக்கும்படியான அனுகூலம் அரசாங்கத்தார் செய்து கொடுக்கவேண்டுமென்றும், அபினுக்கு இருப்பதுபோன்ற லைசன்சுக்குக் கட்டுப்படுத்தியாவது இச்சரக்கு வைத்தியர்களுக்குக் கிடைக்கும்படி அவசியம் செய்யவேண்டுமென்றும் அரசாங்கத்தாரை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

(8) பொதுவாக இலங்கையில் தொழில்புரியும் எல்லா வைத்தியர்களும், முக்கியமாய் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வைத்தியர்களும் அகில இலங்கைத் தமிழ் ஆயுள்வேத வைத்திய சங்கத்துடன் எப்பொழுதும் ஒத்துழைத்து, நமது வைத்தியத்தினுடையதும நம் வைத்திய சகோதரர்களுடையதும் அபிவிருத்திக்காக எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டுமென்றும், அவ் வைத்தியர்கள் அனைவரையும் வெகு அன்புடன் இச்சபை கேட்டுக்கொள்கிறது.

(9) இச் சபையில் நிகழ்ந்துள்ள தீர்மானங்களை உசிதப்படி அரசினர்க்கும், மந்திரிமார்களுக்கும், மற்றும் அவசியமான சட்டசபை அங்கத்தினருக்கும், முக்கியமான சமாசாரப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப் பொதுக் காரியதரிசிக்கு இச்சபை அதிகாரம் கொடுக்கிறது.

L. A. M. College,
Jaffna.

Dr. H. S. Aiyangar
பொதுக் காரியதரிசி

## இறை வணக்கம்

சோதியாய்ச் சுயம்புவாகி சொல்லுருவதாகி
ஆதியான் பெண்ணுகி யரனரியனுமாகி
மாதிரந் தனிலமர்ந்து மதிரவி தானுய்நின்ற
வாதிலாப் பொருளையுன்னி வணக்கமாய் சிந்தைசெய்வாம்.

பழமை பேணப்படாமையாலும் குரு சிஷ்ய முறை குன்றியதாலும் பண்டித லட்சண முள்ள சிஷ்யர்கள பல பெரியோர்களுக்குக் கிடைக்காததாலும் எத்தனையோ சிறந்த தொழில்நுட்ப முறைகள் கீழ்க்காண் செய்யுட்கிணங்க இரகசியமாகவே மறைந்துபோகலாயின.

"மந்திரமும் வாகடமும் பழைய நூலும்
வருவிக்கும் பெரியோரே வழமை கேளீர்
தந்திரமாய்க் காந்தமுக மூசீபத்துந்
தன்மையது போற்றெடர்ந்து தரிப்பாராகில்
சுந்தரமாம் புகழுடைய குலமானுலுந்
துட்டர்கட் கிம்மூன்றும் சொன்னுராகில்
அந்தரமா யெழுநரகி லழுந்திப் பின்னு
மறிவிலார்ச் சண்டாள ராவராரே".

இனியாகிலும் எஞ்சியதைப் பாதுகாக்கவும் மறைந்துபோன தொழில்நுட்பங்களை மீளாய்வு செய்து நிலைநாட்டவும் அருள்பாலிக்கும் வண்ணம் இறைஞ்சி இறையடி சிந்தைகொள்வோம்.

# குடிநீர்வகை

## தலைச்சுற்றுக்கு

பேய்ப்புடல், லாமிச்சுவேர், கோரைக்கிழங்கு, நெல்லுப்பொரி, பாசிப்பயறு, நெல்லிவற்றல் வகைக்கு களஞ்சு 4 வில்வம்பழம் 1 இரண்டு படி நீரில் அரைப்படியாக வற்ற எரித்து 4 நேரம் குடிக்கவும்.

## இருமலுக்கு

(அ) தூதுவளை, கண்டங்கத்தரி, சிறுகாஞ்சோன்றி, ஆடாதோடை வேர் (பட்டை நீக்கி), மல்லி, வால்மிளகு, சித்தரத்தை, திற்பலி, அதிமதுரம், கடுக்காய் தோல் வகைக்கு களஞ்சு 4. மூன்றுபடி நீரில் 1 படியாகும்வரை அவித்து 6 நேரம் பசும்பால் சமன் சேர்த்து கற்கண்டும் சேர்த்துக் கொடுக்கவும்.

(ஆ) கஸ்தூரி 1 கிறேன், வால்மிளகு 4 களஞ்சு சேர்த்து அரைத்து 1 தேய்க்கரண்டி நெய்யை சுடப்பண்ணி அதில் வெருகடிப் பிரமாணம் மேற்படி தூளைச் சேர்த்து காலை, மாலை கொள்ளவும்.

## (குழந்தைகட்கு) கருக்கு குடிநீர்

வட்டத்துத்தியிலை, வேலிப்பருத்தியிலை, நொச்சிக்கூர், மஞ்சளுணாக் கூர், கருவேப்பிலை நெட்டி, பொடுதலை, மாங்கொட்டைப் பித்து, இஞ்சி, வெந்தயம், ஓமம், ஆகியவற்றை சிறிது சூடு காட்டி அத்துடன் கண்சிரட்டைக்கரி, (வாந்தி இருந்தால் தேன்சிலை சுட்ட கரியும் சேர்த்து) $\frac{1}{2}$ படி நீரில் $\frac{1}{3}$ ஆக எரித்து மூன்று நேரம் கொடுக்கவும்.

## காய்ச்சலுக்கு

சிற்றமட்டி, பேரமட்டி, சீந்தில்த்தண்டு, கோரைக்கிழங்கு சித்தரத்தை, மல்லி, நெல்லிவற்றல், பற்படாகம், பறங்கிக்கிழங்கு, அதிமதுரம், இஞ்சி, தூதுவளை, திற்பலி, கண்டங்கத்தரி, ஆடாதோடை வேர் வகைக்கு களஞ்சு 3. மூன்று படி நீரில் ஒருபடி ஆகச்செய்து மூன்று நேரம் மூன்றுநாட்கொள்ளவும்.

## வாதத்திற்கு

(அ) பிரப்பங்கிழங்கு, பறங்கிக்கிழங்கு, சாரணைக் கிழங்கு, இயங்கிழங்கு, வேர்க்கொம்பு, சித்தரத்தை, திற்பலி, வகைக்கு களஞ்சு 6

இரண்டுபடி நீரில் மூன்றில் ஒன்ருக எரித்து 3 நேரம், 3 நாள் திற்பலித் தூள் வெருகடி சேர்த்துக்கொள்ளவும்.

(ஆ) இயங்கங்கிழங்கு, அமுக்கிராங்கிழங்கு, சிவனுர்வேம்பு, கொடிவேலி வேர், வேலம்பட்டை, கொடியார் கூந்தல், வெள்ளறுகு, பிரப்பங்கிழங்கு, ஏலம், வேர்க்கொம்பு, சித்தரத்தை வகைக்கு பலம் 1 பறங்கிக்கிழங்கு இருத்தல் 2 இவைகளை இடித்து 16 படி நீரில் 2 படியாக எரித்துக் கொடுப்பது. தினம் 2 வேளை 1 — 2 அவுன்ஸ்.

பத்தியம்: முருங்கை இலை, முருங்கைப் பிஞ்சு மட்டுமே உதவும். தேங்காய், உப்பு, புளி சகலதும் விலக்கவும். பசுவின் பால் உதவும்.

அகஸ்மேல் சடாக்ஷர அக்கினி குமாரன் 11 நாட்கள் சாப்பிட்டு புறப்பத்தியமும் காத்து பின் தானங்காய் எண்ணெய் வைத்து முழுகி வந்தவர்கள் பூரணசுகம் எய்துவார்கள்.

## வாதத்திற்கு ஒத்தணம் (வக்கம்)

நொச்சி, மாவிலங்கு, முருங்கைப்பட்டை, வேப்பம்பட்டை, பிரண்டை, உத்தமாகாணி, தயிர்வளை, உப்பு, கடுகு, வசம்பு, சுக்கு, கற்பூரம், பெருங்காயம், கரியபவளம், உள்ளி, சாளியா, மஞ்சள் வகைக்கு களஞ்சு 1 இடித்து அவித்து ஒத்தணம் கொடுக்கவும்.

## செங்கண்மாரிக் குடிநீர்

(அ) சிற்றமட்டி வேர், வில்வை வேர், சுக்கு, நெல்லுப்பொரி கொத்தமல்லி, நெருஞ்சிவேர் வகைக்கு களஞ்சு 2 இரவு செவ்விளநீரில் (½ படி) அவித்து காலை, உச்சி, மாலை 3 நேரம் 7 நாட்கள் சாப்பிடவும் பத்தியம் பாலும் சாதமும்.

## கையாகஷியானது

(ஆ) ஒரு அவுன்ஸ் தேசிக்காய்ப் புளியை எடுத்து, அதில் ஓர் தேற்றுவிரைப் பிரமாணம் வாயிலிடும் சிப்பிச் சுண்ணும்பை எடுத்துக் கரைத்து இரவு முழுவதும் அடையவைத்து காலையில் வடித்து 7 நாட்கள் கொள்ள செங்கண்மாரி, மங்கண்மாரி இவைகள் நீங்கும்.

பத்தியம்: பாலும் சாதமும்

## செங்கண்மாரிக்கு சூரணம் கையாகஷியானது

சிறுதேக்கு, திரிகடுகு, வாயுவிளங்கம், ஓமம், இருசீரகம், சித்தரத்தை, சிவதை, கடுகுரோகணி, திற்பலிமூலம், கடுகு, கோட்டம், செண்பகப்பூ, ஏலம், சிறுநாகம்பூ, மதுரம், தேவதாரம், கறுவா, மல்லி,

கராம்பு, சாதிக்காய், கண்டில் வெண்ணெய், வசுவாசி, கல்நார், சாத்திர வேதி, திறிபலை, செங்காந்தம், அதிவிடயம், கோரோசனை, பச்சைக் கற்பூரம், லாமிச்சு, வெட்டிவேர், பேய்ப்புடல்க்காய், விளாவரிசி, உலுவா அரிசி, கார்புகா அரிசி, கார்கோலரிசி, வாலுளுவை அரிசி, கொச்சி ஏலம் வகைக்கு களஞ்சு 1. இடித்து அரித்து காலையில் இஞ்சிச்சாற்றிலும், மாலையில் பசுநெய்யிலும் வெருகடி உண்ண நீங்கும். அதன்பின் கீழ்காய் நெல்லித் தைலம் வைத்து முழுகிவரச் சுகம்.

## சலரோகம்—குடிநீர்

| | | |
|---|---|---|
| விரைபோக்கிய கடுக்காய் | 4 | பலம் |
| விரைபோக்கிய தான்றிக்காய் | 4 | பலம் |
| கடலிராஞ்சிப் பட்டை | 4 | பலம் |
| நெல்லிப் பருப்பு (ஓடு நீக்கி) | 2½ | பலம் |
| தேற்றுவிரை | 1½ | பலம் |
| செங்கிளுவப் பட்டை | 3 | பலம் |
| அவரை வேர்ப் பட்டை | 2½ | பலம் |
| சீந்திற்றண்டு (மேல்தோல் நீக்கி) | 2½ | பலம் |
| முசுட்டைத்தண்டு | 3 | பலம் |

இவற்றைப் பொடித்து 10 படி நீரில் 1 படியாகவர எரித்து வேளை ஒன்றிற்கு ¼ படி வீதம் ஓர் துட்டிடை தேன்விட்டு அசனத்தின்பேரில் உட்கொள்ளத் தீரும்.

அதன்மேல் தேற்றுங்கொட்டை லேகியம் அல்லது அமிர்தசர்க்கரை அல்லது வாலசஞ்சீவி லேகியத்தில் அப்பிரக செந்தூரம் 1 களஞ்சு, வங்க பற்பம் ¾ களஞ்சு, பவளபற்பம் ½ களஞ்சு, தங்கபற்பம் ¼ களஞ்சு வீதம் கலந்து வாலசஞ்சீவி களற்சிவிரைப் பிரமாணமும் தேற்றுங்கொட்டை, அமிர்தசர்க்கரை என்றால் பாக்கு பிரமாணத்திலும் காலை, மாலை கொடுக்கப்பட்டுள்ளது.

பத்தியம்: விலக்கப்பட்ட பகார்த்தங்களுடன் பகல் உறக்கம், இரவு விழிப்பு நீக்கி இச்சாபத்தியம்.

முழுக்கு: மகாசந்தனாதித் தைலம் அல்லது அசுவகெந்தி பலாட்சதத் தைலம் பூரண சுகமுண்டு.

## விர்க்கலுக்கு

எட்டுத் திற்பலி யீரைந்து சீரகம்
கட்டுத்தேனி லரைத்துண்ண விக்கலும்

விட்டுப் போகும் விடாவிடிற் பொத்தகம்
சுட்டுப் போடுநான் தேரைய னல்லவே.

இதன் பொருள்: 8 பங்கு திற்பலியும் 10 பங்கு சீரகமும் சேர்த்து சூரணம் செய்து தேனில் சாப்பிடவேண்டும். விக்கல் நிற்காவிடில் மயிலிறகு சுட்டுச் சாம்பராக்கிச் சூரணத்துடன் தேனில் கலந்து சாப்பிட விக்கல் நிற்கும்.

## வாய்வுக்கு ஒத்தணம்

முருங்கை வேர்ப்பட்டை, வேர்க்கொம்பு, மிளகு, கடுகு, ஆமணக்கம் முத்து, உப்பு, இலுப்பைக்கொட்டை, கொப்பருத் தேங்காய், வேப்பங்கொட்டை, வேப்பிலை இவைகளைச் சமனாக எடுத்து இடித்து வேடு கட்டி அவித்து ஒத்தணம் பிடிக்கவும்.

## முள் குத்தி முறிந்திருந்தால் (கையாக்ஷி)

விளாம்பழத்தையும், வாயிலிடும் சிப்பிச் சுண்ணாம்பையும் பிசைந்து அந்த ஸ்தானத்தில் 2 அல்லது 3 முறை கட்ட உள்ளே முறிந்திருப்பது வெளியே வரும்.

## இரும்பு, ஆணி, தகரம் குத்தினால் (கையாக்ஷி)

ஒரு எலுமிச்சம்பழத்தை 4 கூறுசெய்து வேப்பெண்ணெயில் நன்றாகப் பொரித்து ஒவ்வொரு துண்டாக எடுத்து நன்கு பிசைந்து கட்டினால் உள்ளே கறள் ஏதாவது இருந்தால் வெளியே வந்துவிடும். அதன்பின் அந்த எண்ணெயைக் காயத்தில் போட்டுவர சுகமுண்டாம்.

அவர் சகல சருமரோகத்திற்கும் உபயோகித்த பேதி (ஜலவிரேசனகாரி)
இது இன்று கிடைப்பது அரிது.

## தாளங்காய்க் கிரந்தி எண்ணெய்

தாளங்காய், கோளியவரையிலை, முள்முருக்கு இலை, இயங்கமிலை, வீச்சுவிளாத்தியிலை இவைகளின் சாறு வகைக்கு ½ படி, வேப்பெண்ணெய் ½ படி, தேங்காயெண்ணெய் ½ படி, சுத்திசெய்த (துத்தம், துரிசு, கெந்தகம் ச[illegible]லிங்கம், ரசம்) வகைக்கு களஞ்சு 4, நீர்வெட்டி முத்து 4 களஞ்சு, இ[illegible]ரகம் வகைக்கு பலம் ½, சேங்கொட்டை 45, வாளம் (சுத்தி செய்தது) 100, திற்பலி 5 களஞ்சு, வெள்ளை 2 களஞ்சு, கிருமிசத்துரு 5 களஞ்சு ஆகியவற்றை சேர்த்து இடித்து மெழுகுபதத்தில் எண்ணெயைக் காய்ச்சி வடித்துப் பாவிப்பது.

# சில மூலிகைகள் சரக்குவகையின் சமபதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிமதுரம் | ... | (Abri Radix) Liquorice |
| 2 | அக்கிரகாரம் | ... | Pellitory root |
| 3 | அபின் | ... | Opium (Narcotine) |
| 4 | அகில்கட்டை | ... | Eagle Wood |
| 5 | ஏலரிசி | ... | Cardamomum |
| 6 | ஒதிமரம் | ... | Odina Wodier |
| 7 | ஓமம் | ... | Ajwain |
| 8 | கஞ்சா | ... | Indian Hemp (Cannabis Sativa) |
| 9 | கடுகுரோகணி | ... | Helle Bore |
| 10 | கடுகு | ... | Mustard |
| 11 | கருவேலம்பட்டை | ... | Babul Bark |
| 12 | கரியபோளம் | ... | Small Aloes |
| 13 | கருஞ்சீரகம் | ... | Nigella Sativa |
| 14 | கடுக்காய் | ... | Chebulic Myrobalan |
| 15 | காசுக்கட்டி | ... | Catechu |
| 16 | கார்போக அரிசி | ... | Psoralea Corylifolia |
| 17 | காஞ்சிரம் | ... | Nux Vomica |
| 18 | கிராம்பு | ... | Cloves |
| 19 | கிருமிசத்துரு | ... | Cusso |
| 20 | கோஷ்டம் | ... | Aplotaxis Curiculata |
| 21 | குங்கிலியம் | ... | Bdellium, Gugul |
| 22 | கோவை | ... | Coccinia Indica |
| 23 | சதகுப்பை | ... | Common Dill |
| 24 | சாதிபத்திரி | ... | Maca (Arillus of the nut) |
| 25 | சிவனார்வேம்பு | ... | Indigofena Aspolathorides |
| 26 | சீந்திற்கொடி | ... | Tinosporae Caules |
| 27 | சீந்திற் கிழங்கு | ... | Tinosporae Rodix |
| 28 | சிற்றமட்டி | ... | Pavania Zeylonica |
| 29 | சீமை விளாம்பிசின் | ... | Gum Arabic |
| 30 | சுக்கு | ... | Dried Ginger |
| 31 | சோம்பு | ... | Common Anise |
| 32 | செண்பகத்துச்செடி | ... | Michelia Champaca |
| 33 | ஜாதிக்காய் | ... | Nutmeg |
| 34 | சேராங்கொட்டை | ... | Marking Nut |
| 35 | தண்ணிவிட்டான்கிழங்கு | ... | Asparagus Sammentosus |
| 36 | தான்றிக்காய் | ... | Beleric Myroban |

| | | | |
|---|---|---|---|
| 37 | தூதுவளை | ... | Solonum Trilobotum |
| 38 | தேற்றாங்கொட்டை | ... | Clearing Nut |
| 39 | நன்னாரி | ... | Hemidesmus |
| 40 | நிலவாகை | ... | Senna leaves |
| 41 | நிலவேம்பு | ... | Kariyat |
| 42 | நீரடிமுத்து | ... | Hydrocarpus inebrian |
| 43 | நெருஞ்சில் | ... | Tibulus Lanuginocus |
| 44 | நெல்லிக்காய் | ... | Emblie Mrobalan |
| 45 | நேர்வாளம் | ... | Croton Seeds |
| 46 | பறங்கிச் சாம்பிராணி | ... | Olibanum |
| 47 | பெருங்காயம் | ... | Assafoetida |
| 48 | பேரமட்டி | ... | Pavania Odorata |
| 49 | மலைதாங்கி | ... | Sida Acuta |
| 50 | மக்கி (உறைந்தபால்) | ... | Cambogia Indica |
| 51 | மரமஞ்சள் | ... | Tree Turmeric |
| 52 | மாவிலங்கை | ... | Crataeva Religiasa |
| 53 | மலக்கா சாம்பிராணி | ... | Benzoin |
| 54 | மாசக்காய் | ... | Galls |
| 55 | முசுமுசுக்கை | ... | Bryonia Scabrella |
| 56 | யானைத் திற்பலி | ... | Piper Lances Late |
| 57 | வசுவாசி | ... | Mace |
| 58 | வல்லாரை | ... | Hydrocotyles folia |
| 59 | வாலுழுவை அரிசி | ... | Celastrus paniculata |
| 60 | வாதுமைப்பருப்பு | ... | (தித்திப்பு-sweet, கசப்பு-bitter) Al- |
| 61 | வாயுவிடங்கம் | ... | Robusta (mond |
| 62 | வில்வப்பழம் | ... | bael (belae fruitus) |
| 63 | வெந்தயம் | ... | Fenugreek |
| 64 | வெண்கடுகு | ... | White Mustard |
| 65 | வெண்டைக்காய் | ... | Hibisci Capsulae |
| 66 | அஞ்சனக்கல் | ... | Black Antimony |
| 67 | அன்னபேதி | ... | Sulphate of Iron, Green Vitriol |
| 68 | அப்பிரகம் | ... | Talc Glimmer |
| 69 | கஸ்தூரி | ... | Musk |
| 70 | கந்தகம் | ... | Sulphur |
| 71 | கல்மதம் | ... | Asphalt |
| 72 | கர்டிகாரம் | ... | Nitrate of Silver |
| 73 | கர்கடகசிங்கி | ... | (கடுக்காய்ப்பூ) Phus Succeddanea |
| 74 | குங்குமப்பூ | ... | Saffron, Crocus |
| 75 | கோரோசனை | ... | Gole Stone Bezura |
| 76 | சீமை இந்துப்பு | ... | Epsom Salt |

| | | | |
|---|---|---|---|
| 77 | சினக்காரம் | ... | Alum |
| 78 | தாளகம் | ... | Yellow Arsenic |
| 79 | துரிசு | ... | Sulphate of Copper, Blue Vitrial |
| 80 | நவச்சாரம் | ... | Chloride of Ammonium |
| 81 | நாகபஸ்பம் | ... | Oxide of Zinc |
| 82 | பால்துத்தம் | ... | White Vitrial |
| 83 | பவளம் | ... | Red Coral |
| 84 | புனுகு | ... | Civet |
| 85 | மர உப்பு | ... | Caustic Potash |
| 86 | மிருதார்சிங்கி | ... | Oxide of Lead |
| 87 | மஞ்ஞேசிலே | ... | Realgar |
| 88 | ரசம் | ... | Mercury |
| 89 | ரசபஸ்மம் | ... | Subchloride of Mercury |
| 90 | ரெக் தங்கம் | ... | Gold leaves |
| 91 | ரெக் வெள்ளி | ... | Silver leaves |
| 92 | லிங்கம் | ... | Sulphate of Mercury, Cinnaber |
| 93 | வங்க உப்பு | ... | Acetate of Lead, Sugar of Lead |
| 94 | வளையலுப்பு | ... | Sodium Chloride |
| 95 | விரம் | ... | Perchloride of Mercury |
| 96 | வெடியுப்பு | ... | Saltpetre, Nirate of Potash |
| 97 | வெண்காரம் | ... | Borax |
| 98 | வெள்ளைப்பாஷாணம் | ... | White Arsenic |
| 99 | வெள்ளி பஸ்மம் | ... | Oxide of Silver |
| 100 | யவச்சாரம் | ... | Carbonate of Potash |
| 101 | தாளிசபத்திரி | ... | Many Spiked Flacourtia |

# சித்தவைத்தியத்தில் குழக்குறிமொழி

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்கதேவி | ... | சோணைப் புல் |
| 2. | அக்கினி | ... | செங்கொடிவேலி |
| 3. | அங்கம் | ... | கொன்றை |
| 4. | அங்கி | ... | நெருப்பு |
| 5. | அசுணன் | ... | வெள் வெங்காயம் |
| 6. | அசோகம் | ... | வாழை |
| 7. | அச்சு | ... | உடம்பு |
| 8. | அடப்பன் | ... | கடப்பமரம் |
| 9. | அட்டகாசம் | ... | ஆடாதோடை |
| 10. | அகளிமுலை | ... | பூசினிக்கொடி |
| 11. | அதிட்டம் | ... | மிளகு |
| 12. | அதிபதி | ... | சண்பகம் |
| 13. | அத்தான் | ... | முடக்கொத்தான் |
| 14. | அத்திக்கன்னி | ... | கரிசலாங்கன்னி |
| 15. | அபாணம் | ... | கடுக்காய் |
| 16. | அமுதவல்லி | ... | சிந்தில் கொடி |
| 17. | அம்பலத்தி | ... | தில்லைமரம் |
| 18. | அம்பு | ... | திற்பலி |
| 19. | அரக்கி | ... | பாஷாணம் |
| 20. | அரசன் | ... | துருசு |
| 21. | அரண் | ... | மஞ்சள் |
| 22. | அரி | ... | கொடிவேலி |
| 23. | அருக்கன் | ... | சுக்கு |
| 24. | அருணம் | ... | எலுமிச்சம்பழம் |
| 25. | அருளுறுதி | ... | வேம்பு |
| 26. | அலியன் | ... | கடுக்காய் |
| 27. | அழகர் | ... | வெள்ளெருக்கு |
| 28. | அனந்தன் | ... | வெடியுப்பு |
| 29. | ஆட்டுக்கால் | ... | அடம்பு |
| 30. | ஆதிபரம் | ... | சாதிக்காய் |
| 31. | ஆள்வணங்கி | ... | தொட்டாற்சிணுங்கி |
| 32. | ஆலத்தி | ... | அரத்தைப்பூண்டு |
| 33. | ஆனைக்கன்று | ... | அத்தி |
| 34. | இணங்கன் | ... | வெடியுப்பு |
| 35. | இந்திரவல்லி | ... | பிரண்டை |

| | | | |
|---|---|---|---|
| 36. | இந்திராணி | ... | நொச்சி |
| 37. | இரதி | ... | இலந்தை |
| 38. | இராகு | ... | கோமேதகம் |
| 39. | இருகுரங்குக்கை | ... | முசுமுசுக்கை |
| 40. | இருடி | ... | ஆந்தை |
| 41. | இருளி | ... | கருஞ்சீரகம் |
| 42. | ஈசன் | ... | கௌரிப்பாஷாணம் |
| 43. | உய்யக்கொண்டான் | ... | கொய்யா |
| 44. | ஊரண்டிஞர் | ... | கள்ளிமரம் |
| 45. | உருடைமுதலியார் | ... | முருங்கை |
| 46. | எரிகாலி | ... | காட்டாமணக்கு |
| 47. | எருத்துவாயன் | ... | கோரைக்கிழங்கு |
| 48. | எருமைநாக்கி | ... | கோரைப்புல் |
| 49. | ஏகாரவல்லி | ... | பலா |
| 50. | ஏமத்தூர் | ... | காட்டாமணக்கு |
| 51. | ஏமவதி | ... | கடுக்காய் |
| 52. | ஓடன் | ... | ஆமை |
| 53. | ஔவை | ... | நஞ்சு |
| 54. | கங்காளன் | ... | துருசு |
| 55. | கசமாது | ... | ஊமத்தஞ்செடி |
| 56. | கச்சி | ... | சிந்தில்கொடி |
| 57. | கடலடைத்தான் | ... | அபின், கஞ்சா |
| 58. | கடலாடி | ... | நாயுருவி |
| 59. | கடுவன் | ... | மாவிலங்கு |
| 60. | கணக்கன் | ... | சண்பகமரம் |
| 61. | கண்ணான் | ... | கையாந்தகரை |
| 62. | கண்ணு | ... | திற்பலி |
| 63. | கண்ணுக்கினியாள் | ... | பொன்னுங்காணி |
| 64. | கரிப்பான் | ... | கையாந்தகரை |
| 65. | கவுசி | ... | கொன்றை |
| 66. | கள்ளி | ... | கொடிக்கள்ளி |
| 67. | கறி | ... | மிளகு |
| 68. | கற்பு | ... | முல்லைச்செடி |
| 69. | கற்பூரம் | ... | பொன்னுங்காணி |
| 70. | கன்னி | ... | கற்றாழை |
| 71. | காசி | ... | சீரகம் |
| 72. | காசிமீரம் | ... | குங்குமப்பூ |
| 73. | காட்டெருமை | ... | முருக்கமரம் |
| 74. | காட்டெலி | ... | கருஞ்சீரகம் |
| 75. | காதலி | ... | வாழை |

| | | |
|---|---|---|
| 76. காந்தன் | ... | கார்த்திகைப்பூ |
| 77. காந்தள் | ... | விஷ்ணுகரந்தை |
| 78. காமரசம் | ... | மாமரம் |
| 79. காமவதி | ... | மரமஞ்சள் |
| 80. காமனை | ... | சிறுகிழங்கு |
| 81. காமியக்கல் | ... | கோமேதகம் |
| 82. காயசித்திரி | ... | கருங்காலி மரம் |
| 83. காயம் | ... | பெருங்காயம் |
| 84. காலன் | ... | நீலபாஷாணம் |
| 85. காளி | ... | மணத்தக்காளி |
| 86. கிருஷ்ணவல்லி | ... | நன்னாரி |
| 87. கிருதுவேதன் | ... | பிர்க்கு |
| 88. கிளிமூக்கன் | ... | கற்றாழை |
| 89. குந்தி | ... | குன்றிமணி |
| 90. குட்டியிடுக்கி | ... | சிற்றரத்தை |
| 91. குதிரைப்பல்லன் | ... | வெள்ளைப்பூண்டு |
| 92. குயின்மொழி | ... | அதிமதுரம் |
| 93. குருநாதன் | ... | துருசு |
| 94. குறத்தி | ... | நிலப்பனை |
| 95. குறவன் | ... | பாதரசம் |
| 96. கொண்டேசன் | ... | சுக்கு |
| 97. கோடைக்கு வாடான் | ... | ஆவிரை |
| 98. கோண்டம் | ... | குறிஞ்சாக்கொடி |
| 99. கோமளம் | ... | பசு |
| 100. கோமான் | ... | சதுரக்கள்ளி |
| 101. கோழைவிந்து | ... | துளசி |
| 102. கோளகம் | ... | திற்பலி |
| 103. கோணேசர் | ... | குங்குமப்பூ |
| 104. கோற்கொடி | ... | சுரக்கொடி |
| 105. கௌசிகம் | ... | குங்கிலியம் |
| 106. கௌதமி | ... | கோரோசனை |
| 107. கௌத்தி | ... | வால்மிளகு |
| 108. கௌரி | ... | கடுகு |
| 109. சகுனம் | ... | கருணைக்கிழங்கு |
| 110. சங்கோசம் | ... | மஞ்சள் |
| 111. சடாதரம் | ... | அருநெல்லி |
| 112. சட்டால் | ... | வில்வம் |
| 113. சட்டி | ... | தாமரை |
| 114. சண்டன் | ... | புளியமரம் |

| | | | |
|---|---|---|---|
| 115. | சதகம் | ... | சாதிக்காய் |
| 116. | சத்திரம் | ... | தும்பை |
| 117. | சந்தரி | ... | துளசி |
| 118. | சபலை | ... | திற்பலி |
| 119. | சபீனம் | ... | வசம்பு |
| 120. | சம்பர் | ... | நேர்வாளம் |
| 121. | சம்பு | ... | நாவல் |
| 122. | சம்பூகம் | ... | சங்கு |
| 123. | சயந்தி | ... | வாதமடக்கி |
| 124. | சரவணம் | ... | நாணல் |
| 125. | சரோஜினி | ... | தாமரை |
| 126. | சலினி | ... | திற்பலி |
| 127. | சவுண்டி | ... | திற்பலி |
| 128. | சௌபாக்கியம் | ... | சுக்கு |
| 129. | சணகந்தம் | ... | வசம்பு |
| 130. | சன்னிநாயகன் | ... | கருஞ்சீரகம் |
| 131. | சாகாமூலி | ... | சிந்தில் |
| 132. | சாடி | ... | திற்பலி |
| 133. | சாணம் | ... | சாதிலிங்கம் |
| 134. | சாதம் | ... | எருக்கு |
| 135. | சாது | ... | தயிர் |
| 136. | சாத்தான் | ... | கற்றாழை |
| 137. | சாந்தம் | ... | சந்தனம் |
| 138. | சாந்தி | ... | ஓமம் |
| 139. | சாமி | ... | பொன் |
| 140. | சாமுண்டி | ... | பொன்னாவரை |
| 141. | சாயல் | ... | மஞ்சள் |
| 142. | சானகி | ... | பொன்னாங்காணி |
| 143. | சிகண்டி | ... | ஆமணக்கு |
| 144. | சிக்கடி | ... | அவரை |
| 145. | சிக்கம் | ... | வால்மிளகு |
| 146. | சிங்கப்பெருமாள் | ... | நன்னாரி |
| 147. | சிங்கமுகி | ... | பொன்னூமத்தை |
| 148. | சிங்கம் | ... | ஆடாதோடை |
| 149. | சிங்கவல்லி | ... | தாதுலை |
| 150. | சிலேந்திராரி | ... | செம்பருத்தி |
| 151. | சில்லி | ... | சிறுகீரை |
| 152. | சிவாக்கி | ... | சாதிக்காய் |
| 153. | சிவம் | ... | உப்பு |

| | | | |
|---|---|---|---|
| 154. | சிவயோகி | ... | வசம்பு |
| 155. | சிவன் | ... | வைடூரியம் |
| 156. | சிறுமான் | ... | சிறுகள்ளி |
| 157. | சின்னி | ... | இலவங்கம் |
| 158. | சீதை | ... | பொன்னாங்காணி |
| 159. | சீலம் | ... | சிந்திற்கொடி |
| 160. | சிவதடி | ... | வெள்ளெரிக்காய் |
| 161. | சீறல் | ... | பெருங்காயம் |
| 162. | சுகந்தம் | ... | வாழை |
| 163. | சுக்கிலம் | ... | வெண்ணெய் |
| 164. | சுடுகாடு மீட்டான் | ... | முடக்கொத்தான் |
| 165. | சுண்டி | ... | வேர்க்கொம்பு |
| 166. | சுமங்கை | ... | ஆடுதின்னாப்பாலை |
| 167. | சுயோகி | ... | கள் |
| 168. | சுள்ளி | ... | மாந்தளிர் |
| 169. | சூதன் | ... | பாதரசம் |
| 170. | சூரி | ... | எருக்கு |
| 171. | சூலி | ... | சதுரக்கள்ளி |
| 172. | செட்டி | ... | மூக்கரட்டை |
| 173. | சேகர் | ... | நாயுருவி |
| 174. | சேந்தகனி | ... | கருவாடு |
| 175. | சேலை | ... | அசோகமரம் |
| 176. | சொண்டி | ... | வேர்க்கொம்பு |
| 177. | சொர்ணம் | ... | கரும்பு |
| 178. | சோமம் | ... | கள் |
| 179. | சோமநாரி | ... | இந்துப்பு |
| 180. | சோமவல்லி | ... | சீந்தில் |
| 181. | சோமன் | ... | நிலப்பாஷாணம் |
| 182. | சௌண்டி | ... | திற்பலி |
| 183. | ஞாலமாது | ... | ஊமத்தை |
| 184. | ஞானமாது | ... | பொன்னாவரை |
| 185. | தங்கை | ... | குவளைப்பூ |
| 186. | தச்சன் | ... | மிளகு |
| 187. | தட்டான் | ... | புடோல் |
| 188. | தட்டை | ... | மூங்கில் |
| 189. | தருமராசன் | ... | மூங்கில் |
| 190. | தலைவிரித்தான் | ... | சாறணை |
| 191. | தலைவலிப்பெருமாள் | ... | குப்பைமேனி |
| 192. | தாசி | ... | மருதோன்றி |

193. தாதை ... பேய்க்கொம்மட்டி
194. தாயைக் கொன்றாள் ... வாழை
195. தாவணி ... கண்டங்கத்தரி
196. திரிசூலி ... கற்றாழை
197. திரிதண்டம் ... நெருஞ்சில்
198. திரிபுரத்தான் ... குப்பைமேனி
199. திரிபுரமெரித்தான் ... மாவிலங்கம்
200. திரிபுரலோகி ... விஷ்ணுகிரந்தை
201. திரிபுரி ... சாரணை
202. திருடி ... கள்ளிச்செடி
203. துடக்கறுப்பான் ... முடக்கொத்தான்
204. தெருவிலழகி ... குப்பைமேனி
205. தேவதூபம் ... குங்கிலியம்
206. தேவிகை ... ஊமத்தை
207. தொண்டை ... கோவைக்கொடி
208. தோட்டி ... நெல்லிமரம்
209. நந்தி ... மருதோன்றி
210. நாகபந்து ... அரசமரம்
211. நாகமாதா ... துளசி
212. நாகவல்லி ... வெற்றிலைக்கொடி
213. நாரி ... நன்னாரி
214. நீலகண்டன் ... முருங்கை
215. நீலக்காலி ... அவுரி
216. நீள்சடையோன் ... கொன்றை
217. நெடியோன் ... துளசி
218. நெடுவிரல் ... ஆடாதோடை
219. பச்சைக்கொம்பு ... இஞ்சி
220. பண்டாரமுக்கி ... நாயுருவி
221. பண்டாரம் ... குங்குமம்
222. பத்தியக்காரி ... சிறுகீரை
223. பயிரவி ... முடக்கொத்தான்
224. பருவயோனி ... கரும்பு
225. பரைநாதம் ... கந்தகம்
226. பல்லிரை ... சதுரக்கள்ளி
227. பன்னி ... சணல்
228. பாடை ... பருத்தி
229. பாடை குலைத்தான் ... பாவற்கொடி
230. பாணன் ... காட்டாமணக்கு
231. பாதாளத்தம்பி ... நிலக்காளான்
232. பாகிரி ... மூங்கில்

| | | |
|---|---|---|
| 233. | பார்க்கவி | சிறுதேக்கு |
| 234. | பூதர்த்திரி | கீழ்காய்நெல்லி |
| 235. | பூபதி | மல்லிகை |
| 236. | பூமிநாயகன் | நிலவேம்பு |
| 237. | பூசனை | இலவமரம் |
| 238. | பூனை | இலவம்பிசின் |
| 239. | பூனைவணங்கி | குப்பைமேனி |
| 240. | பெண்ணை | பனை |
| 241. | பொற்காசு | கொள்ளு |
| 242. | போசனக்கஸ்தூரி | நாரத்தங்காய் |
| 243. | மகாவல்லி | வில்வம் |
| 244. | மாங்கல்யம் | சந்தனம் |
| 245. | மங்கை | கற்றாழை |
| 246. | மதலை | கொன்றைமரம் |
| 247. | மதில் | இஞ்சி |
| 248. | மதுக்குடி | எலுமிச்சை |
| 249. | மதுரவல்லி | கற்றாழை |
| 250. | மயிரை | தக்கோலம் |
| 251. | மயிலம் | குப்பைமேனி |
| 252. | மரிசி | மிளகு |
| 253. | மறலி | குங்குமப்பூ |
| 254. | மாடு | பொன் |
| 255. | மாதவி | குருக்கத்தி |
| 256. | மாதுபாகம் | புட்பராகம் |
| 257. | மாமுனி | நாயுருவி |
| 258. | மால்தொடை | துளசி |
| 259. | மீனாட்சி | பொன்றாங்காணி |
| 260. | மீனாண்டி | சர்க்கரை |
| 261. | முண்டனி | நொச்சிவேர் |
| 262. | மூக்கிலழகி | குப்பைமேனி |
| 263. | மூக்கில் | வசம்பு |
| 264. | மேகநாதம் | சிறுகீரை |
| 265. | மேதி | வெந்தயம் |
| 266. | மோகம் | முருங்கை |
| 267. | மோகி | கஞ்சா |
| 268. | வச்கிராங்கி | கடுகுரோகிணி |
| 269. | வக்கிராட்சி | பிரண்டை |
| 270. | வரசி | சிந்தில் |
| 271. | வயிரவன் | சிறுகீரை |
| 272. | வன்னி | கொடிவேலி |

| | | | |
|---|---|---|---|
| 273. | வன்னிப்பிரியம் | ... | கொடிவேலி |
| 274. | வாதநாசனம் | ... | ஆமணக்கு |
| 275. | வானநாடு | ... | பொன்னங்காணி |
| 276. | வீரம் | ... | இஞ்சிக்கிழங்கு |
| 277. | வேதமுக்கியை | ... | கஸ்தூரி |
| 278. | வேதன் | ... | கடுக்காய் |
| 279. | இந்திரவல்லி | ... | முடக்கொத்தான் |
| 280. | இந்திராணி | ... | நொச்சி |
| 281. | இந்திரி | ... | நன்னாரி |
| 282. | இந்திரேயம் | ... | பொற்பாவட்டை |
| 283. | இந்துமாதகம் | ... | கடம்பு |
| 284. | இந்துன் | ... | நெல்லி |
| 285. | இமரம் | ... | மரமஞ்சள் |
| 286. | இன்பூறல் | ... | சாயவேர் |
| 287. | இரதம் | ... | மாமரம் |
| 288. | இரம்பிலம் | ... | மிளகு |
| 289. | இரளி | ... | கொன்றை |
| 290. | இராசதாலம் | ... | கமுகு |
| 291. | இராசசூயம் | ... | தாமரைப்பூ |
| 292. | இராமப்பிரியம் | ... | தாமரை |
| 293. | இருகுரங்குக்கை | ... | முசுமுசுக்கை |
| 294. | இருசுகம் | ... | மாதுளை |
| 295. | இரும்புலி | ... | துவரை |
| 296. | இருவேலி | ... | வெட்டிவேர் |
| 297. | இருளி | ... | கருஞ்சீரகம் |
| 298. | இரேசசி | ... | கடுக்காய் |
| 299. | இலகம் | ... | ஊமத்தை |
| 300. | இலகு | ... | அகில் |
| 301. | இலகுசம் | ... | ஈரப்பலா |
| 302. | இலாஞ்சி | ... | ஏலக்காய் |
| 303. | இலாடம் | ... | புளி |

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.
போன்: 23002